## மானியக் கோரிக்கை எண். 48

## போக்குவரத்துத் துறை

### கொள்கை விளக்கக் குறிப்பு

### 1. முன்னுரை:

இந்தியத் திருநாட்டில் சமூக வளர்ச்சியும், பொருளாதார முன்னேற்றமும் அடைந்துள்ள மாநிலங்களில் ஒன்றான தமிழ்நாடு, தனி நபர் வருமானத்திலும் மற்றும் மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டிலும் வேகமாக முன்னேற்றம் அடைந்து வருகிறது. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் மனித வாழ்க்கைத் தரம் உயர போக்குவரத்து உறுதுணையாக உள்ளது. நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும், அதைச் சார்ந்த சேவை வளர்ச்சிக்கும், கச்சாப் பொருட்களையும் மற்றும் உற்பத்தி செய்யப்படும் பொருட்களையும் ஓரிடத்திலிருந்து வேறு இடத்திற்கு கொண்டு செல்வதற்கும், பணியாளர்கள் தங்களுடைய இருப்பிடத்திலிருந்து பணிபுரியும் இடத்திற்கு சென்று வருவதற்கும், இம்மாநிலத்தின் வணிக வளர்ச்சி அனைத்து இடங்களிலும் சமமான அளவில் இருப்பதற்கும்,



போக்குவரத்து சேவை உறுதுணையாக உள்ளது. தாராளமயமாக்கப்பட்ட அமைப்பில் உற்பத்தியைப் பெருக்குவதற்கும், போட்டி மனப்பான்மையுடன் கூடிய பொருளாதார வளர்ச்சிக்கும் தரமான போக்குவரத்து சேவை உறுதுணையாக உள்ளது.

அரசு போக்குவரத்துக் கழகங்கள் திறமையான மற்றும் தேவையான போக்குவரத்து வசதியினை பொதுமக்களுக்கு வழங்குவதில் முக்கியமான பங்கு வகிக்கின்றன. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் செயல்திறன் மற்றும் நிர்வாக மேலாண்மையில் நற்பெயர் பெற்றுள்ளன. பொதுமக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் சாதாரண வகைப் பேருந்துகளுடன், விரைவுப் பேருந்துகள், தாழ்தள சொகுசுப் பேருந்துகள், சொகுசுப் பேருந்துகள், அதிசொகுசுப் பேருந்துகள், அதிநவீன சொகுசுப் பேருந்துகள், வால்வோ பேருந்துகள் மற்றும் குளிர்சாதன வால்வோ பேருந்துகள் போன்ற பல்வேறுவகைப் பேருந்துகள் போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் இரயில்வே மற்றும் விமானப் போக்குவரத்துத் திட்டங்களை ஒருங்கிணைக்கும் முகவராக போக்குவரத்துத்துறை

செயல்பட்டு வருகிறது. போக்குவரத்துத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் மோனோ இரயில் திட்டத்தின் முதற்கட்ட வேலைகள் நடைபெற்று வருகின்றன. இதற்கு மாநகர போக்குவரத்துக் கழகம் ஒருங்கிணைக்கும் முகமை நிறுவனமாக நியமிக்கப்பட்டுள்ளது.

## 2. நிறுவனங்கள்:

அரசு போக்குவரத்துத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் கீழ்க்காணும் நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.

1. எட்டு அரசு போக்குவரத்துக் கழகங்கள்.
2. தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம்.
3. சாலை போக்குவரத்து நிறுவனம்.
4. பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு.
5. மோட்டார் வாகன பராமரிப்புத்துறை.

## 2.1 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள்:

அரசு போக்குவரத்துக் கழகங்கள், உபரிப் பேருந்துகள் உட்பட 21,207 பேருந்துகளை தமிழ்நாட்டிலும் அண்டை மாநிலங்களான கர்நாடகா, ஆந்திரா, கேரளா மற்றும் புதுச்சேரியிலும் இயக்கி வருகின்றன. நாளொன்றுக்கு 88.44 இலட்சம் கி.மீ. தூரம் பேருந்துகளை



இயக்குவதன் மூலம் 2.10 கோடி பயணிகள் பயணிக்கின்றனர். 31–03–2012 அன்றைய நிலவரப்படி போக்குவரத்துக் கழகப் பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை 1,34,237 ஆகும். இயக்கச் செயல்திறன் குறியீட்டளவைப் பொறுத்தவரை, அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

## 2.2 அரசு போக்குவரத்துக் கழகங்களின் உள்கட்டமைப்புகள்:

அரசு போக்குவரத்துக் கழகங்கள் 286 கிளைகள் மூலம் கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் பேருந்துகளை இயக்கி, பராமரித்து வருகின்றன. அரசு போக்குவரத்துக் கழகங்களின் உள்கட்டமைப்பு வசதிகள் பின்வருமாறு:-

1. இஞ்சின் புதுப்பித்தலுக்கான தொழிற்கூடங்கள் – 21
2. பேருந்து கூண்டு கட்டும் பிரிவுகள் – 21
3. உருளிப்பட்டை புதுப்பிக்கும் தொழிற்கூடங்கள் – 20
4. பேருந்து தரச் சான்றளிக்கும் பிரிவுகள் – 48

## 2.3 பேருந்து கட்டணம் மாற்றியமைத்தல்:

18–11–2011 அன்று முதல் பேருந்து கட்டணங்கள் மாற்றியமைக்கப்பட்டன. பேருந்து கட்டணங்கள்

மாற்றியமைக்கப்பட்ட பின்னரும், நாட்டிலேயே மிகக்குறைந்த பேருந்து கட்டணம் வசூலிக்கும் மாநிலமாகத் தமிழகம் திகழ்கிறது. அண்டை மாநிலங்களின் பேருந்துக் கட்டண விகிதத்துடன் தமிழ்நாட்டில் பேருந்து கட்டண ஒப்பீடு பின்வருமாறு :-

(ஒரு கி.மீ. கட்டணம் பைசாவில்)

| மாநிலம் | கட்டண விகிதம் அமுலுக்கு வந்த தேதி | புறநகர் (சாதாரணம்) | விரைவு/ சொகுசு | அதி சொகுசு | அதி நவீன சொகுசு | குளிர் சாதனம் |
|---|---|---|---|---|---|---|
| தமிழ்நாடு | 18.11.2011 | 42 | 56 | 60 | 70 | 90 |
| மஹாராஷ்டிரா | 13.03.2010 | 70 | 95.83 | 145.83 | – | – |
| ஆந்திரா | 16.07.2011 | 50 | 62 | 70 | 82 | – |
| குஜராத் | 24.06.2008 | 48.31 | 51.45 | 53.98 | – | – |
| கேரளா | 08.08.2011 | 55 | 60 | 65 | 75 | 90 |
| கர்நாடகம் | 26.06.2011 | 43 | 65.7 | 80 | 102 | 134.5 |

31–03–2012ஆம் நாள் நிலவரப்படி அரசு போக்குவரத்துக் கழகங்களால் பயணிகளுக்கு வழங்கப்படும் பேருந்து சேவை விவரம் :

| | |
|---|---|
| சென்னை மாநகர் – நகரப்பேருந்துகள் | 3222 |
| நகரப் பேருந்துகள் ( மாவட்டங்களில்) | 6687 |
| புறநகர் பேருந்துகள் | 8174 |
| விரைவுப் பேருந்துகள் | |
| மாநிலத்திற்குள் | 527 |
| வெளிமாநிலங்களுக்கு | 378 |
| மலைப்பகுதி பேருந்துகள் | 519 |
| மொத்த இயக்கப் பேருந்துகளின் எண்ணிக்கை | 19507 |
| உபரிப் பேருந்துகள் | 1700 |
| மொத்த பேருந்துகள் | 21207 |



தற்போது பேருந்துகளின் சராசரி வயது **4.24** ஆண்டுகள் ஆகும்.

## 2.4 செயல்பாட்டுத் திறன்:

**2010–2011**–ஆம் ஆண்டு மற்றும் **2011–2012**–ஆம் ஆண்டின் இயக்கச் செயல்திறன் விவரங்கள் பின்வருமாறு :–

| வ. எண். | பொருள் | 2010-11 | 2011-12 |
|---|---|---|---|
| 1 | பேருந்துகளின் எண்ணிக்கை | 21,154 | 21,207 |
| 2 | இயக்கப்படும் பேருந்துகள் | 19,110 | 19,507 |
| 3 | பேருந்துகளின் பயன்பாடு | 94.39% | 94.42% |
| 4 | ஒரு நாளைக்கு இயக்கப்படும் மொத்த தூரம் (இலட்சம் கி.மீ) | 87.59 | 88.44 |
| 5 | கிலோ மீட்டர் செயல்பாட்டுத் திறன் (சிறப்பு பேருந்துகள் நீங்கலாக) | 99.07% | 99.00% |
| 6 | கிலோ மீட்டர் செயல்பாட்டுத் திறன் (சிறப்பு பேருந்துகளையும் சேர்த்து) | 104.04% | 103.51% |
| 7 | ஒரு நாளைக்கு பயணிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | 208.36 | 210.00 |
| 8 | பழுதுபடுதல் (10,000 கிலோ மீட்டருக்கு) | 0.01 | 0.01 |
| **9** | விபத்துகள் (1,00,000 கிலோ மீட்டருக்கு) | **0.25** | **0.22** |

| | | | |
|---|---|---|---|
| 10 | மொத்த விபத்துகள்<br>உயிரிழப்பு விபத்துகள்<br>இறந்தவர்கள் எண்ணிக்கை | 8013<br>1472<br>1656 | 7108<br>1237<br>1397 |
| 11 | எரிபொருள் செயல் திறன் (கி.மீ/லிட்டருக்கு) சராசரியாக | 5.25 | 5.25 |
| 12 | 10,000 கிலோ மீட்டருக்கு எஞ்ஜின் ஆயில் உட்கொளல் (லிட்டரில்) | 3.81 | 3.98 |
| 13 | கழிவு செய்யப்பட்ட உருளிப்பட்டை ஓடிய தூரம் (இலட்சம் கிலோ மீட்டர்) | 1.64 | 1.65 |
| 14 | உருளிப்பட்டை புதுப்பிக்கப்பட்ட தடவைகள் | 3.38 | 3.35 |
| 15 | இயக்க வேண்டிய ஒரு பேருந்துக்கு பணியாளர்கள் விகிதம் (தொழிற்கூட பணியாளர்கள் உட்பட) | 6.69 | 6.40 |

## 2.5 அரசு போக்குவரத்துக் கழகங்களின் நிதிநிலை பற்றிய ஒரு கண்ணோட்டம்:

17–11–2011–க்கு முன்னர், கடந்த 10 ஆண்டுகளாக பேருந்து கட்டணம் மாற்றி அமைக்கப்படாததால், போக்குவரத்துக் கழகங்கள் நஷ்டத்தில் இயங்கி வந்தன. மேலும், டீசல் விலை உயர்வினாலும், குறிப்பாக அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஊதிய உயர்வினாலும், அரசு போக்குவரத்துக் கழகங்களின் நிர்வாகம் மற்றும் இயக்கச் செலவுகள் அதிகரித்துள்ளன. 2011–2012–ஆம் ஆண்டு



(தணிக்கைக்குமுன்) ஏற்பட்டுள்ள இழப்பு ரூ.1762.73 கோடியாகும். நாளொன்றுக்கு பேருந்து கட்டண வசூல் ரூ.18.75கோடியாகும். நாளொன்றுக்கு மொத்த வருவாய் ரூ.21.39 கோடியாகும். பேருந்துகளில் விளம்பரங்கள் செய்வதன் மூலம் அரசு போக்குவரத்துக் கழகங்கள் 2011–2012–ஆம் ஆண்டில் ரூ.12 கோடி வருவாய் ஈட்டியுள்ளன. மேலும், தனியார் நிறுவனங்களுக்கு வாடகை அடிப்படையில் பேருந்துகளை இயக்குவதன் மூலமும் அரசு மற்றும் தனியார் கூட்டாண்மை மூலமும் வணிக வளாகங்களுடன் கூடிய கிளை அலுவலகம், பேருந்து நிலையம், பயணவழி உணவகங்கள் ஏற்படுத்துவதன் மூலமும் அரசு போக்குவரத்துக் கழகங்களின் நிதி நிலைமையை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 2.6 போக்குவரத்துக் கழக இயக்கச் செலவு வகைகள்:

சம்பளம் மற்றும் டீசல் விலை உயர்வினால் போக்குவரத்துக் கழகங்களின் இயக்கச் செலவுகள்

அதிகரிக்கின்றன. பல்வேறு செலவினங்கள் விவரம் சதவீதத்தில் கீழ்வருமாறு:-

| | | |
|---|---|---|
| 1 | சம்பளம் | 45% |
| 2 | டீசல் | 32% |
| 3 | பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு | 6% |
| 4 | தேய்மானம் | 5% |
| 5 | மோட்டார் வாகன விபத்து இழப்பீடு மற்றும் பிற இனங்கள் | 5% |
| 6 | வட்டி | 5% |
| 7 | வரிகள் | 2% |
| | மொத்தம் | 100% |

## 2.7 போக்குவரத்துக் கழகங்களுக்கு 2011–12–ஆம் ஆண்டில் தொழிலாளர்களுக்கு அரசு நிதியுதவியுடன் வழங்கப்பட்ட பணப்பயன்கள்:

போக்குவரத்து தொழிலாளர்களுக்கு சம்பளம் மற்றும் போனஸ் வழங்கும் வகையில், வழிவகை முன்பணமாக ரூ.178.14 கோடி நிதியுதவி அரசால் வழங்கப்பட்டுள்ளது. மேலும், போக்குவரத்துக் கழகங்களுக்கு உயர்வேக டீசல் எண்ணை விலை உயர்வால் ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்யும் வகையில் ரூ.81.02 கோடி வழிவகை முன்பணம் வழங்கப்பட்டுள்ளது. போக்குவரத்துக் கழகங்களில் ஓய்வு பெற்ற



பணியாளர்களுக்கு 16–05–2011லிருந்து மார்ச் 2012 வரை வழங்கப்பட்ட தொகை ரூ.52.21 கோடி. 1609 ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்குப் பணிக்கொடையாக ரூ.42.6 கோடியும், 698 ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு விடுப்பு ஒப்படைப்பு ஊதியமாக ரூ.9.61 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய ஓய்வு காலப் பணப்பயன்கள் கிடைக்க தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 2.8 பயணச் சலுகைகள்:

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பின்வரும் தரப்பினருக்குப் பயணச் சலுகைகள் அளிக்கப்படுகின்றன.

1. இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் மேலவை உறுப்பினர்கள்.
2. அரசினால் தெரிவு செய்யப்பட்ட பத்திரிகை நிருபர்கள்
3. மத்திய / மாநில ஓய்வூதியம் பெறும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் அவர்தம் விதவைகள் மற்றும் வாரிசுதாரர்கள்.

4. புற்று நோயாளிகள், மாற்றுத் திறனாளிகள் (காதுகேளாதோர், பார்வையற்றவர்கள், மனவளர்ச்சி குன்றியவர்கள் மற்றும் வலிப்பு நோயாளிகள்)

5. நாடகக் கலைஞர்கள்

6. எச்.ஐ.வி. / எய்ட்ஸ் நோயாளிகள்

## 2.9 மாணவ / மாணவியர்களுக்கான பயணச் சலுகைகள்:

1. அரசு மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளிகளில் முதல் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்புவரை பயின்று வரும் மாணவ மாணவியர்கள், அரசு தொழில்நுட்பப் பயிலகங்கள், தொழில் பயிற்சிக் கூடம் மற்றும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் அனைவருக்கும் இலவசப் பேருந்து பயண அட்டைகள் வழங்கப்படுகின்றன.

2. தனியார் கல்லூரிகள், தனியார் தொழில்நுட்பப் பயிலகங்கள் மற்றும் தனியார் பொறியியல் கல்லூரிகள் உட்பட அனைத்து கல்லூரிகளிலும் பயிலும் அனைத்து மாணவ மாணவியர்களுக்கு, வீட்டிலிருந்து கல்வி நிலையங்களுக்கு, கல்லூரி நாட்களிலும் மற்றும்



விடுமுறை நாட்களிலும் சென்றுவர 50% சலுகைக் கட்டண பயண அட்டைகள் வழங்கப்படுகின்றன.

3. சென்னை மாநகர் பேருந்துகளில் பயணம் செய்யும் கல்லூரி மாணவர்களுக்கு, அவர்கள் நூலகத்திற்குச் சென்று பின் வீட்டிற்குப் பயணிக்க 60 மாற்று அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படுகின்றன.

4. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பப் பயிலகங்களில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும், இலங்கை அகதிகள் முகாம்களைச் சார்ந்த மாணவர்களுக்கும், 50% பேருந்துக் கட்டணச் சலுகை விரிவுபடுத்தப்பட்டு உள்ளது.

பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு, 2011–12–ஆம் ஆண்டில் அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களும் 31.98 இலட்சம் கட்டணமில்லா மற்றும் சலுகைக் கட்டணப் பேருந்து பயண அட்டைகளை வழங்கியுள்ளன.

சென்னை நகரிலுள்ள மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கு இலவச பயண அட்டைக்குரிய பயணச்சீட்டுக் கட்டணத்தின் முகமதிப்பு முழுமையாக அரசால் ஈடு செய்யப்படுகிறது. புறநகர்ப் போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரை, சலுகைப் பயணக்

கட்டணத்தின் மதிப்பு, அரசு மற்றும் போக்குவரத்துக் கழகங்களினால் 56:44 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளப்பட்டு ஈடு செய்யப்படுகின்றது.

### 2.10 விருப்பம் போல பயணம் செய்யும் பயணச் சீட்டுகள்:

கீழ்க்கண்ட கட்டண விகிதத்தில் பயணிகள் தங்கள் விருப்பம் போல் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சி மற்றும் திருநெல்வேலி நகரப் பகுதிகளில் எங்கு வேண்டுமானாலும், பயணச் சீட்டில் அச்சிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு பயணம் செய்யலாம்.

1) ஒரு நாள் பயணச் சீட்டு – ரூ. 50/–
2) வாராந்திரப் பயணச் சீட்டு – ரூ. 300/–
3) மாதாந்திரப் பயணச் சீட்டு – ரூ.1000/–

மேலும், சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகம், "விருப்பம் போல் பயணம் செய்யும்" பயணச்சீட்டு விற்பனையை பேருந்துகளில் நடத்துனர் மூலம் வழங்கி வருகிறது..

### 2.11 தொழிலாளர் நலத்திட்டங்கள்

போக்குவரத்துக் கழகங்கள், அதன் தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் நலன்



கருதி, கீழ்க்கண்ட நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன:-

1. பணிக்கால அடிப்படையிலான சிறப்புச் சம்பள உயர்வு/ஆய்வுப் பலன்கள்
2. விடுப்புப் பயன்கள்
3. திருப்பான் படி ( **Steering Allowance** )
4. கல்வி உதவித்தொகை
5. சலுகைக் கட்டண சிற்றுண்டி வசதி
6. சீருடைகள்
7. திருமணக் கடன்
8. வழக்குக் கட்டணம் ஈடு செய்தல்
9. தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு, பள்ளி மற்றும் கல்லூரிகளுக்குச் சென்றுவர இலவச பயண அனுமதிச் சீட்டு
10. குடும்பநல நிதி
11. விருப்ப ஓய்வூதியத் திட்டம்
12. விடுமுறை விடுதி
13. புதிய சுகாதாரக் காப்பீட்டுத் திட்டம் (தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு இருப்பதுபோல)

14. சாலை போக்குவரத்து நிறுவனத்தினால் நடத்தப்படும் மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி மற்றும் தொழில்நுட்பப் பயிலகங்களில் ஊழியர்களின் பிள்ளைகளுக்கு உள் ஒதுக்கீடு.

15. போக்குவரத்து ஊழியர்களுக்கான ஒய்வூதியத் திட்டம்

16. தொழிலாளர் ஒய்வு கால சேமநல நிதித் திட்டம்

17. இறுதிச் சடங்கு செலவுகள்

18. பணிமனைகள் மற்றும் பேருந்து நிலையங்களில் ஓட்டுநர் மற்றும் நடத்துநர்கள் தங்கி ஓய்வெடுக்க, தரமான அடிப்படை வசதிகளுடன் இரண்டு அடுக்கு கட்டில் வசதியும் செய்யப்பட்டுள்ளன.

## 2.12. அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் மேற்கொள்ளப்படும் சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள்:

தமிழ்நாட்டில் அதிவிரைவான நகர வளர்ச்சி மற்றும் அதிகமான வாகனப் பெருக்கம் ஆகியவற்றால் சாலை விபத்துகள் பெருமளவில் உயர்ந்துள்ளது. இது அரசாங்கத்திற்குப் பெரும் பொறுப்பை ஏற்படுத்தியுள்ளது. 2011–12–ஆம் ஆண்டில், 7360 வழக்குகளுக்கு ரூ.100.73 கோடி வாகன விபத்து இழப்பீட்டுத் தொகையாக, நீதிமன்றங்களில் செலுத்தப்பட்டுள்ளது.



சாலை விபத்துகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு அரசு போக்குவரத்துக் கழகங்கள் கீழ்க்காணும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன:–

1. ஓட்டுநர்களின் திறனை மேம்படுத்தும் வகையில், புத்தாக்கப் பயிற்சி மையங்களில் ஓட்டுநர்களுக்குத் தொடர்ந்து பயிற்சி அளிக்கப்படுகிறது.

2. ஓட்டுநர்களின் மனஅழுத்தத்தைக் குறைக்கும் வகையில், யோகா பயிற்சி மற்றும் தியானப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

3. உயரிய தொழில்நுட்பத்துடன் கூடிய ஓட்டுதல் ஒத்த தன்மை கருவி மூலம் ஓட்டுநர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

4. பணியின் போது கைபேசி உபயோகித்தல் மற்றும் மது அருந்துதல் கடுமையான விதி மீறலாகக் கருதப்படுகிறது.

5. குறிப்பிட்ட கால இடைவெளியில், காவல் துறையின் சோதனை மற்றும் போக்குவரத்துத் துறையின் பறக்கும்படை சுவாசப் பரிசோதனைக் கருவி கொண்டு, பணியின் போது மது அருந்தியிருப்பவர்களைக் கண்டறிய திடீர் சோதனையும் நடத்தப்படுகிறது.

**6.** ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்கள் நன்கு ஓய்வு எடுக்கும் வகையில், தற்போதைய ஓய்வு அறைகளின் தரம் மேம்படுத்தப்பட்டுள்ளன.

**7.** மாநில நெடுஞ்சாலை மற்றும் காவல்துறை உதவியுடன் சாலை வசதியை மேம்படுத்துதல், போக்குவரத்து தொடர்பான எச்சரிக்கை குறியீடு பலகைகளை விபத்து ஏற்படும் பகுதிகளில் நிறுவுதல் மூலம் விபத்து ஏற்படுவதைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**8.** 10 ஆண்டுகள் மற்றும் அதற்கும் மேலாக, எவ்வித விபத்துமின்றி பணிபுரிந்த ஓட்டுநர்களுக்கு சிறப்பு ஊக்கத் தொகை வழங்குவதுடன், பாதுகாப்பான ஓட்டுதலுக்கான விருது வழங்கும் திட்டத்தின் கீழ் பரிசுகளும் வழங்கப்படுகின்றன.

**9.** தொடர் விபத்துகள் மூலம் உயிரிழப்பு ஏற்பட காரணமாக இருந்த ஓட்டுநர்களைப் பணிநீக்கம் செய்வது என்ற ஒரே மாதிரியான நிலைப்பாட்டினை அரசு போக்குவரத்துக் கழகங்கள் கொண்டுள்ளன.



## 2.13 விபத்து இழப்பீட்டுத் தொகை நிதித் திட்டம்:

அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளில் ஏற்படும் விபத்தில் காயமடைந்தவர்களுக்கும் மற்றும் உயிர் இழந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கும் நீதிமன்றத்தை நாடாமல் விரைவாக விபத்து இழப்பீட்டுத் தொகை வழங்கும் பொருட்டு, அரசின் பங்காக ரூ.20 கோடி ரூபாயும், அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களின் பங்காக ரூ.20 கோடியும் ஆகமொத்தம் ரூ.40 கோடியில் ‘‘விபத்து இழப்பீட்டுத் தொகை நிதித்திட்டம்’’ என்ற ஒரு புதிய தொகுப்பு நிதி உருவாக்கப்பட்டுள்ளது. இந்நிதி, தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தால் கையாளப்படும்.

இத்திட்டத்தின் மூலம் இழப்பீட்டுத் தொகை கீழ்க்கண்டவாறு வழங்கப்படும்:-

| விபத்தின் தன்மை | வழங்கப்படும் அதிகப்பட்ச தொகை |
|---|---|
| உயிரிழப்பு ஒன்றுக்கு | ரூ.3,00,000/– |
| கொடுங்காயமுற்றவருக்கு | ரூ.1,00,000/– |

## 2.14 மக்கள் நீதிமன்றம் :

விபத்து இழப்பீடு வழங்குவதால் ஏற்படும் செலவினத்தைக் குறைக்கவும், விரைவாக இழப்பீடு வழங்கவும், மக்கள் நீதிமன்றம் மூலம் அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களும் விபத்து இழப்பீட்டு வழக்குகளைத் தீர்வு செய்கின்றன. 2011–12ஆம் ஆண்டில் மக்கள் நீதிமன்றம் மூலமாக 884 வழக்குகள் தீர்வு செய்யப்பட்டன, அதற்காக ரூ.14.89 கோடி இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது.

## 2.15 அரசு போக்குவரத்துக் கழகங்களின் புதிய முயற்சிகள்:

**(1) புதிய பேருந்துகள் அறிமுகம் :**

சென்ற நிதியாண்டில் அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களிலும் உள்ள வயது முதிர்ந்த பழைய பேருந்துகளைக் கழிவு செய்து, அவற்றிற்குப் பதிலாக 3000 புதிய பேருந்துகளை வாங்கி அறிமுகப்படுத்துவதற்கு அரசு ஆணை வெளியிடப்பட்டு, தற்பொழுது பேருந்து அடிச்சட்டம் கொள்முதல் செய்யப்பட்டு, 587 பேருந்துகளுக்கான



கூண்டு கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது. இப்பணி, தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

**(2) பழைய பேருந்துகளில் புதிய கூண்டு கட்டுதல் :**

பெரும்பாலான பேருந்துகளில் அடிச்சட்டங்கள் நல்லநிலையில் இருந்தபோதிலும், பேருந்துகளின் கூண்டுகள் அதிர்வு ஏற்படும் நிலையிலும், ஜன்னல் கண்ணாடிகள் மிகவும் மோசமான நிலையில் இருப்பதாலும், பேருந்துக் கூண்டுகளின் பக்கவாட்டுத் தகடுகள் மற்றும் குழாய்கள் துருப்பிடித்த நிலையில் உள்ளதாலும், பொதுமக்களுக்கு வசதியான போக்குவரத்து சேவையை அளிக்கும் பொருட்டு, 1432 பேருந்துகளை முழுவதுமாக புதுப்பிக்கும் பொருட்டு, முதற்கட்டமாக 308 பேருந்துகளுக்கு ரூ.24.39 கோடி நிதியுதவி வழங்கப்பட்டு, அதில் 200 பேருந்துகள் முழுவதுமாகக் கூண்டு கட்டப்பட்டு, புதிய பொலிவுடன் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

**(3) அரசு மற்றும் தனியார் கூட்டாண்மை திட்டத்தை செயல்படுத்துதல்:**

அரசு மற்றும் தனியார் கூட்டாண்மை மூலம் வணிக வளாகங்களைக் கட்டுவதற்காக அரசு போக்குவரத்துக் கழகங்களில் பயன்படுத்தக்கூடிய நிலையில் உள்ள 11 இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அவையாவன, சென்னையில் தியாகராயநகர் பணிமனை, திருவான்மியூர் பணிமனை, விக்ரவாண்டி, உளுந்தூர்பேட்டை, திருச்சி பேருந்து நிலையம், சேலம் பழைய பேருந்து நிலையம், மதுரை பெரியார் பேருந்து நிலையம், வேளாங்கண்ணி, திருநெல்வேலியில் மகாராஜாநகர், கட்டபொம்மன் நகர் கிளை மற்றும் வண்ணாரப் பேட்டை புறவழிச்சாலை கிளை ஆகியவை ஆகும்.

**(4) மின்னணு பயணச்சீட்டு முன்பதிவு :**

மின்னணு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தித் தொலைதூரப் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகள், எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் முன்பதிவு செய்யும் முறை 2007–ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது 39 இடங்களில் 57 மையங்களில் இம்முறை செயல்படுத்தப்பட்டு



வருகிறது. எப்போதும் எங்கிருந்தும் தொலைதூரப் பேருந்துகளில் பயணம் செய்வதற்கு மின்னணு மற்றும் கைபேசி மூலம் பயணச்சீட்டு முன்பதிவு செய்யும் முறை 2011–ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.இது பயணிகளிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

**(5) இணையதளம் மூலம் பயணச்சீட்டு முன்பதிவு செய்தல்:**

இரயில்வே மற்றும் விமானப் போக்குவரத்துத் துறையில் இணைய தளம் மூலம் பயணிகள் முன்பதிவு செய்வது போன்றே தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்வதற்கு எந்த நேரத்திலும், உலகின் எந்த இடத்திலிருந்தும் இணைய தளம் மூலமாகவும் மற்றும் கைபேசி வழியாகவும் 30 நாட்களுக்கு முன்பாகப் பயணச்சீட்டு முன்பதிவு செய்ய www.tnstc.in என்ற இணையதள முகவரி மூலம் இ–டிக்கட் முன்பதிவுத் திட்டம் 03–10–2011 முதல் தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**(6) மின்னணு பயணச்சீட்டு வழங்கும் கருவிகள் :**

இத்திட்டத்தின் கீழ் 2011-12–ஆம் ஆண்டில் ரூ.18.74 கோடி செலவில் அதிநவீன 5000 கையடக்க மின்னணு பயணச்சீட்டு கருவிகள் வாங்க அரசு ஆணை வெளியிடப்பட்டு கொள்முதல் செய்ய, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக, தலைமைக் கட்டுப்பாட்டு மையத்துடன் இணைக்கப்பட்ட 6 கோட்டங்கள் மற்றும் 19 மண்டலங்களுக்குட்பட்ட 250 பணிமனைகளில் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

**(7) மின்னணு தொழில்நுட்ப முறையில் ஏலமிடுதல்:**

அரசு போக்குவரத்துக் கழகங்களில் உள்ள கழிவு செய்யப்பட்ட பேருந்துகளை மின்னணு தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி ஏலமிட அரசு ஆணை வெளியிடப்பட்டு, மத்திய அரசு நிறுவனமான திருவாளர்கள் எம்.எஸ்.டி.சி (M/s.MSTC) சேவை நிறுவனமாகத் தெரிவு செய்யப்பட்டு, நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. இதன் பயனாக, கழிவு



செய்யப்பட்ட பேருந்துகளை நல்ல விலையில் விற்க வாய்ப்பு உள்ளது.

**(8) பயணவழி உணவகங்கள் :**

தொலைதூரப் பயணங்களின் போது பயணிகளுக்கு சிறப்பான வசதி அளிக்கும் பொருட்டு, முதற்கட்டமாக 37 இடங்களில் உள்ள பயணவழி உணவகங்களின் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில், மேற்கண்ட பயண வழி உணவகங்களில் பேருந்துகளை நிறுத்த கூடுதல் இட வசதி, குடிநீர் வசதி, நவீன சமையல் கூடம், உணவருந்தும் இடம், நியாயமான விலையில் தரமான உணவு, சுகாதாரமான கழிப்பிட வசதி போன்றவை அளிக்கப்படும். இதன் மூலம் பயணிகள், ஓய்வுடன்கூடிய புத்துணர்வு பெற இயலும். மேலும் அரசு போக்குவரத்துக் கழகங்கள், கூடுதல் வருவாய் பெற வாய்ப்பும் ஏற்படும். இத்திட்டத்தின் மூலம், அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 5 கோடி ரூபாய் வருவாய் கிடைக்கும்.

**(9) விபத்து போன்ற அவசர காலகட்டங்களில் பயணிகள் வெளியேறுவதற்காக அவசரகால வழி (Emergency Exit) தொலைதூர பேருந்துகளில் அமைக்கப்பட்டுள்ளது :**

மற்ற மாநிலங்களுக்கு முன் உதாரணமாக, விபத்து போன்ற அவசர காலகட்டங்களில் பயணிகள் வெளியேறுவதற்காக அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் அனைத்துப் புதிய பேருந்துகளில் அவசரகால வழி (Emergency Exit) அமைக்கப்பட்டு வருகிறது. இதில் முதற்கட்டமாக இயக்கப்பட்ட, புதிய **50** தொலைதூரப் பேருந்துகளில் அவசரகால வழி (Emergency Exit) அமைக்கப்பட்டு, பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளன. இதன் பயனாக, விபத்து நேரங்களில் பயணிகள் இவ்வழியாக மிக துரிதமாக வெளியே வர இயலும். இதனால் பெரும் அளவில் உயிர்ச்சேதம் தவிர்க்கப்படும்.

**(10) மாற்றுத் திறனாளிகளுக்கு மின்தூக்கி வசதியுடன் பேருந்துகள் :**

மாற்றுத்திறனாளிகள் பேருந்துகளில் ஏறி இறங்கவும், பயணம் செய்யவும் மிகவும்



கஷ்டப்படுகிறார்கள். இதனைத் தவிர்க்கும் பொருட்டு, சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் மாற்றுத்திறனாளிகள் தங்களுடைய சக்கர நாற்காலியுடன் பேருந்தில் பயணம் செய்ய மின்தூக்கி வசதியுடன் ஏழு பேருந்துகளில் வடிவமைக்கப்பட்டு **29–11–2011** முதல் இயக்கப்பட்டுள்ளது. மாற்றுத் திறனாளிகளுக்கென பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட சிறப்புப் பேருந்து மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக, தமிழ்நாட்டில் செயல்படத் தொடங்கியுள்ளது. இதனால் மாற்றுத் திறனாளிகள் பேருந்துகளில் பயணம் செய்வது மிகவும் எளிதாக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மேலும் பல பேருந்துகளில் இவ்வசதியை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**(11) அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் சிப்பஞ்சல் மற்றும் தூதஞ்சல் சேவை:**

அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் சிப்பஞ்சல் (Parcel Services) மற்றும் தூதஞ்சல் (Courier Services) சேவை முதற்கட்டமாக தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூரில் அறிமுகப்படுத்தப்பட்டு, அதன் மூலம் வருடம் ஒன்றுக்கு

ரூ. 24 இலட்சம் வருமானத்தை ஈட்டியுள்ளது. அவ்வாறே, அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் அமுல்படுத்தத் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**(12) கோயம்பேடு பேருந்து நிலைய ஊழியர்கள் ஓய்வறையில் இரண்டு அடுக்குக் கட்டில்கள் வசதி:**

கோயம்பேடு பேருந்து நிலையத்திலுள்ள ஊழியர்களின் ஓய்வறையில், ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் ஓய்வெடுப்பதற்கு வசதியாக, 17 இலட்சம் ரூபாய் செலவில் 223 இரண்டு அடுக்குக் கட்டில்கள் வாங்கப்பட்டு, ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**(13) போக்குவரத்துக் கழக ஊழியர்களின் ஓய்வறைகளின் தரம் மேம்படுத்துதல்:**

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் பேருந்துகளை இயக்கி வருகின்றன. தொலைதூரப் பேருந்துகளை இயக்கியபின், ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் ஓய்வெடுப்பதற்கு வசதியாக, பணிமனைகள் மற்றும் பேருந்துநிலையங்களில் அமைந்துள்ள 115 ஓய்வறைகளில்,



ரூ.41.65 இலட்சம் செலவில் அனைத்து அடிப்படை வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டு, தொழிலாளர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**(14) பணிமனைகள் மேம்பாடு:**

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் 286 பணிமனைகள் உள்ளன. இவற்றில் சில பணிமனைகளின் கான்கிரீட் தரைத் தளங்கள் பழுதடைந்தும், பேருந்துகள் பழுதுநீக்கும் பணி செய்ய இடையூறாக இருந்த காரணத்தாலும், 260 பணிமனைகளின் கான்கிரீட் தரைத் தளங்கள், பேருந்துகளின் பழுதுநீக்கும் மற்றும் பராமரிப்புக் கூடம் ஆகியவை 316.37 இலட்சம் ரூபாய் செலவில், செப்பனிடப்பட்டு, உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு, தொழிலாளர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

## 3. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள்:

தமிழ்நாட்டிலுள்ள 8 போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் நாளொன்றுக்கு 2.10 கோடி பயணிகள் பயணம் செய்கின்றார்கள்.

## 3.1 மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட்:

மாநகர் போக்குவரத்துக் கழகம் 3497 பேருந்துகளை, 748 வழித்தடங்களில் இயக்குகிறது. இதில் 275 பேருந்துகள் உபரிப் பேருந்துகளாக உள்ளன. நாளொன்றுக்கு 42,961 பயண நடைகளை இயக்கி, சென்னை பெருநகரில் தனியுரிமை பெற்ற போக்குவரத்துக் கழகமாக இயங்கி வருகிறது. சாதாரண பேருந்துகள், விரைவுப் பேருந்துகள், தாழ்தள சொகுசுப் பேருந்துகள், தொடர் பேருந்துகள் மற்றும் வால்வோ குளிர்சாதனப் பேருந்துகளை மாநகர் போக்குவரத்துக் கழகம் இயக்கி வருகிறது.

பயணிகளுக்கு விருப்பம்போல் பயணம் செய்யும் பயணச் சீட்டு திட்டத்தின் கீழ் ஒரு நாள் பயணச் சீட்டு, வாராந்திர பயணச்சீட்டு மற்றும் மாதாந்திர பயணச்சீட்டு போன்ற பல்வேறு வகையான பயணச் சலுகைத் திட்டங்களை மாநகர் போக்குவரத்துக் கழகம் வழங்கி வருகிறது. பொது மக்களின் வசதிக்காக, மாநகர் போக்குவரத்துக் கழகம், துரித பறக்கும் இரயில்



நிலையங்களுக்கும், புறநகர்ப் பகுதிகளுக்கும் இணைப்புப் பேருந்து சேவையை வழங்கி வருகிறது.

மோனோ இரயில் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகம் முகவை நிறுவனமாக நியமிக்கப்பட்டுள்ளது.

புவி இருப்பிட முறைமை (GPS) தொழில் நுட்பத்தின் மூலம் பேருந்துகளின் நகர்வைக் கண்காணித்தல் முறை 550 பேருந்துகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது. மேலும், 51 பேருந்து நிறுத்தங்களில் மின்னணு அறிவிப்புப் பலகைகள் நிறுவப்பட்டுள்ளன. பேருந்துகளில் விளம்பரங்கள் செய்வதன் மூலமும், பேருந்துகளை சுத்தம் செய்வதற்குரிய செலவினத்தைச் சிக்கனப்படுத்துவதன் மூலமும், நிதிநிலையை மேம்படுத்த மாநகர் போக்குவரத்துக் கழகம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மேலும், அரசு மற்றும் தனியார் கூட்டாண்மை மூலம் வணிக வளாகங்களைக் கட்டுவதற்கென, தியாகராயநகர் பணிமனையுடன் கூடிய பேருந்து நிலையம் மற்றும் திருவான்மியூர் பணிமனையுடன் கூடிய பேருந்து நிலையம் ஆகிய இடங்களைத் தெரிவு செய்து,

அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகள் கூண்டு கட்டும் பிரிவு குரோம்பேட்டையில் செயல்பட்டு வருகிறது.

## 3.2 அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட், சென்னை:

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் 994 பேருந்துகளை இயக்கி வருகிறது. இதில் 89 உபரி பேருந்துகளும் அடங்கும். தமிழ்நாட்டில் 527 தொலைதூரப் பேருந்துகளையும், ஆந்திர மாநிலத்திற்கு 55 பேருந்துகளையும், கர்நாடக மாநிலத்திற்கு 143 பேருந்துகளையும், கேரள மாநிலத்திற்கு 96 பேருந்துகளையும், புதுச்சேரிக்கு 84 பேருந்துகளையும் இயக்கி வருகிறது. இப்போக்குவரத்துக் கழகம், சொகுசு, அதிசொகுசு, அதிநவீன சொகுசு மற்றும் குளிர்சாதன வசதியுடன் கூடிய பேருந்துகளையும் இயக்கி வருகிறது.

சென்னை–திருச்சிக்கு இடையில் இயங்கும் 50 பேருந்துகளில் புவி இருப்பிட முறைமை (GPS)தொழில் நுட்பத்தின் மூலம் வாகன நகர்வைக் கண்காணித்தல் நடைமுறையில் உள்ளது. மின்னணு தொழில்நுட்பத்தைக் கொண்டு வாகனங்களின் வருகை மற்றும் புறப்படும் நேரம் ஆகியவற்றை அறிவிக்கும் மின்னணு அறிவிப்புப் பலகைகள், சென்னை, விழுப்புரம், திருச்சி போன்ற முக்கிய நகரங்களில் அமைக்கப்பட்டுள்ளன. அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தனது வருவாயினை பெருக்கும் நோக்கத்துடன், அரசு–தனியார் கூட்டாண்மை மூலம் வணிக வளாகங்களைக் கட்டுவதற்கு திருச்சி பேருந்து நிலையம், சேலம் பழைய பேருந்து நிலையம் மற்றும் மதுரை பெரியார் பேருந்து நிலையம் ஆகிய இடங்களைத் தெரிவு செய்து, அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்போக்குவரத்துக் கழகத்தின் பேருந்து கூண்டு கட்டும் பிரிவு திருச்சி மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றது.



## 3.3 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட்:

இப்போக்குவரத்துக் கழகம், 3415 பேருந்துகளை விழுப்புரம், வேலூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, கடலூர் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் இயக்கி வருகிறது. இக்கழகம் சாதாரண பேருந்துகள்,

விரைவுப் பேருந்துகள், சொகுசுப் பேருந்துகள் மற்றும் வால்வோ குளிர்சாதனப் பேருந்துகளை இயக்கி வருகிறது. இப்போக்குவரத்துக் கழகம் 1096 நகரப் பேருந்துகளையும், 2063 புறநகர் பேருந்துகளையும், 27 மலைப்பகுதி பேருந்துகளையும் இயக்கி வருகிறது. மேலும், இப்போக்குவரத்துக் கழகம் 229 உபரி பேருந்துகளைக் கொண்டுள்ளது. இப்போக்குவரத்துக் கழகம் தனது வருவாயினை பெருக்கும் நோக்கத்துடன், அரசு–தனியார் கூட்டாண்மை மூலம் வணிக வளாகங்களைக் கட்டுவதற்கு விக்ரவாண்டி மற்றும் உளுந்தூர்பேட்டையில் இடங்களை தெரிவு செய்து அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்போக்குவரத்துக் கழகம் போக்குவரத்து சேவையை கண்காணித்து மேம்படுத்த விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, வேலூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்களைச் செயல்படுத்தி வருகின்றது. இப்போக்குவரத்துக் கழகத்தின் பேருந்து கூண்டு கட்டும் பிரிவு பண்ருட்டி, வேலூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.



## 3.4 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட்:

இப்போக்குவரத்துக் கழகம், 2090 பேருந்துகளை சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் இயக்கி வருகிறது. இவற்றுள் 833 நகர பேருந்துகள், 1081 புறநகர் பேருந்துகள், 20 மலைப்பகுதி பேருந்துகள் மற்றும் 156 உபரி பேருந்துகளும் அடங்கும். இக்கழகம் ஏற்காடு, கொல்லிமலை, ஒகேனக்கல், தாரமங்கலம், திருச்செங்கோடு (அர்த்தநாரீஸ்வரர் கோவில்), நாமக்கல் (ஆஞ்சநேயர் கோவில்) மற்றும் மேட்டூர் போன்ற சுற்றுலா மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்குப் பேருந்துகளை இயக்கி வருகிறது. இப்போக்குவரத்துக் கழகம் போக்குவரத்து சேவையை கண்காணித்து மேம்படுத்த சேலம் மற்றும் தர்மபுரி ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்களை செயல்படுத்தி வருகிறது. இப்போக்குவரத்துக் கழகத்தின் பேருந்து கூண்டு கட்டும் பிரிவு நாமக்கல் மற்றும் தர்மபுரி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

## 3.5 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட்:

இப்போக்குவரத்துக் கழகம், 3125 பேருந்துகளை கோயம்புத்தூர், திருப்பூர், நீலகிரி மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் இயக்கி வருகிறது. 1324 நகர பேருந்துகளையும், 1091 புறநகர் பேருந்துகளையும் மற்றும் 408 மலைப்பகுதி பேருந்துகளையும் இயக்கி வருகிறது. இப்போக்குவரத்துக் கழகம் 302 உபரி பேருந்துகளைக் கொண்டுள்ளது. இப்போக்குவரத்துக் கழகம் சாதாரண, தாழ்தள, தொடர், அதிநவீன சொகுசு மற்றும் குளிர்சாதனப் பேருந்துகளை இயக்கி வருகிறது.

இப்போக்குவரத்துக் கழகம் பண்ணாரி, காரமடை, பூண்டி, பழனி, வால்பாறை, மேட்டுப்பாளையம், குன்னூர் மற்றும் உதகை போன்ற வழிபாட்டுத் தலங்கள் மற்றும் சுற்றுலாத்தலங்களுக்கு தனது பேருந்துகளை இயக்கி வருகிறது. இப்போக்குவரத்துக் கழகம் போக்குவரத்து சேவையை கண்காணித்து மேம்படுத்த கோவை, ஈரோடு மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்களை செயல்படுத்தி வருகின்றன. இப்போக்குவரத்துக் கழகத்தின் பேருந்து கூண்டு கட்டும்



பிரிவு தாராபுரம், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை மற்றும் பள்ளிப்பாளையம் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

## 3.6 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட் :

இப்போக்குவரத்துக் கழகம், 3614 பேருந்துகளை தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டிணம், திருச்சி, கரூர், பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் இயக்கி வருகிறது. இவற்றில் 241 உபரி பேருந்துகளும் அடங்கும். 1240 நகர பேருந்துகள் மற்றும் 2133 புறநகர் பேருந்துகளை இயக்கி வருகிறது.

இப்போக்குவரத்துக் கழகம் முக்கியமான வழிபாட்டு மற்றும் சுற்றுலாத் தலங்களான நாகூர், வேளாங்கண்ணி, திருநள்ளார், சுவாமிமலை, தஞ்சாவூர், ஸ்ரீரங்கம், இராமேஸ்வரம், ஆகிய இடங்களுக்குப் பேருந்துகளை இயக்குகிறது. இப்போக்குவரத்துக் கழகம் தனது வருவாயினை பெருக்கும் நோக்கத்துடன், அரசு–தனியார் கூட்டாண்மை மூலம் வணிக வளாகத்தினை கட்டுவதற்கு வேளாங்கண்ணியில் இடத்தைத் தெரிவு செய்து, அதற்கான பணிகள்

நடைபெற்று வருகின்றன. இப்போக்குவரத்துக் கழகம், போக்குவரத்து சேவையைக் கண்காணித்து மேம்படுத்த கும்பகோணம், திருச்சி, புதுக்கோட்டை மற்றும் காரைக்குடி ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்களை செயல்படுத்தி வருகின்றன. இப்போக்குவரத்துக் கழகத்தின் பேருந்து கூண்டு கட்டும் பிரிவு பொறையார், கரூர், காரைக்குடி மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

### 3.7 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட் :

இப்போக்குவரத்துக் கழகம், 2524 பேருந்துகளை மதுரை, திண்டுக்கல், தேனி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் இயக்கி வருகிறது. இவற்றுள் 1337 நகர பேருந்துகள், 886 புறநகர் பேருந்துகள், 64 மலைப்பகுதி பேருந்துகள் மற்றும் 237 உபரி பேருந்துகள் அடங்கும். வீரபாண்டி மாரியம்மன் திருவிழா, இருக்கன்குடி மாரியம்மன் திருவிழா, பழனி தைப்பூசம் திருவிழா ஆகியவற்றை முன்னிட்டு அவ்விடங்களுக்கு சிறப்புப் பேருந்துகளை இப்போக்குவரத்துக் கழகம் இயக்கி



வருகிறது. இப்போக்குவரத்துக் கழகம், போக்குவரத்து சேவையைக் கண்காணித்து மேம்படுத்த மதுரை, திண்டுக்கல் மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்களைச் செயல்படுத்தி வருகின்றன. இப்போக்குவரத்துக் கழகத்தின் பேருந்து கூண்டு கட்டும் பிரிவு மதுரை, வத்தலக்குண்டு மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

### 3.8 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட்:

இப்போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களிலும் மற்றும் கேரள மாநிலத்திற்கும் 1948 பேருந்துகளை இயக்கி வருகிறது. இவற்றுள் 920 புறநகர் பேருந்துகள், 857 நகர பேருந்துகள் மற்றும் 171 உபரி பேருந்துகளும் அடங்கும். இப்போக்குவரத்துக் கழகம் திருச்செந்தூர், சங்கரன்கோயில், உவரி, கன்னியாகுமரி மற்றும் குற்றாலம் ஆகிய வழிப்பாட்டுத் தலங்கள் மற்றும் சுற்றுலாத் தலங்களுக்குப் பேருந்துகளை இயக்கி வருகிறது. இப்போக்குவரத்துக் கழகம் தனது வருவாயினைப் பெருக்கும் நோக்கத்துடன், அரசு–தனியார் கூட்டாண்மை

மூலம் வணிக வளாகங்களைக் கட்டுவதற்கு, மகாராஜா நகர், கட்டபொம்மன் நகர் கிளை மற்றும் வண்ணாரப் பேட்டை புறவழிச்சாலை கிளை ஆகிய இடங்களைத் தெரிவு செய்து, அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்போக்குவரத்துக் கழகம், போக்குவரத்து சேவையைக் கண்காணித்து மேம்படுத்த திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்களைச் செயல்படுத்தி வருகின்றன. இப்போக்குவரத்துக் கழகத்தின் பேருந்து கூண்டு கட்டும் பிரிவு திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

## 4. தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம்:

அரசுத்துறைகள், அரசு நிறுவனங்கள் மற்றும் பொது மக்களிடம் வைப்பீட்டுத் தொகை பெற்று, அதன் மூலம் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குக் கடன் வழங்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் துவங்கப்பட்டது. இது வங்கியல்லாத நிதி நிறுவனமாக இந்திய ரிசர்வ் வங்கியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு போக்குவரத்து



வளர்ச்சி நிதி நிறுவனத்தில் **2.19** இலட்சம் முதலீட்டாளர்களின் மூலம் வைப்பீடு செய்த மொத்தத் தொகை ரூ **1212.92** கோடியாகும். தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் பல்வேறு வகையான கடன்களை அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கி உதவி வருகிறது.

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தால் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு அளிக்கப்பட்ட நிலுவையில் உள்ள கடன் விபரம் (31–03–2012 அன்றுள்ளவாறு)

(ரூபாய் கோடியில்)

| | | |
|---|---|---|
| 1 | தவணை முறை கொள்முதல் கடன் | 456.50 |
| 2 | நடைமுறை மூலதனத்திற்கான கடன் | 918.78 |
| | மொத்தம் | **1375.28** |

## 5. பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு லிமிடெட்:

பல்லவன் போக்குவரத்து அறிவுரைப்பணிக்குழு லிமிடெட், சாலைப் போக்குவரத்துத் திட்டங்களுக்கு ஆலோசனை வழங்கும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டது.

பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு போக்குவரத்துப் பணி, நவீன தொழில்நுட்பப் போக்குவரத்து பிரிவு, நெடுஞ்சாலை, அறிவுசார் போக்குவரத்தினை முறைப்படுத்துதல், தகவல் தொழில்நுட்பம், மென்பொருள் தயாரித்தல் மற்றும் வருவாய் சார்ந்த திட்டங்கள் ஆகியவற்றிற்கு ஆலோசனை சேவையை அளித்து வருகிறது. பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களுக்கான நவீன திட்டங்களை செயல்படுத்தும் முகமை நிறுவனமாகவும் திகழ்கிறது. அரசு போக்குவரத்துக் கழகங்களில் மின்னணு பயணச்சீட்டு வழங்கும் கருவிகளை செயல்படுத்துதல், உடனடி தளவழிப் பயணச் சீட்டு முன்பதிவு செய்தல் மற்றும் தொலைதூரப் பேருந்துகளில் பயணம் செய்ய மின்னணுப் பயணச்சீட்டு முறையினைக் கண்காணித்தல், கழிவு செய்யப்பட்ட பழைய பேருந்துகளை மின்னனு தொழில்நுட்பத்தின் மூலம் ஏலமிடுதல், அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை புவி இருப்பிட முறைமை (GPS) தொழில் நுட்பத்தின் மூலம் வாகனம் இருக்குமிடம் மற்றும் நகர்வைக் கண்காணித்தல் மற்றும் அரசுத் துறை ஆவணங்களை வருடு பொறிதல் மற்றும்



நுன்மென்படலமாக்குதல் ஆகிய திட்டங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

## 6. சாலைப் போக்குவரத்து நிறுவனம்:

சாலைப் போக்குவரத்து, சாலை பாதுகாப்பு, சாலை விபத்து மற்றும் பேருந்து மேலாண்மை போன்றவைகளில் ஆராய்ச்சிப் பணியை மேற்கொள்ளும் நோக்குடன் சாலைப் போக்குவரத்து நிறுவனம் செயல்பட்டு வருகிறது. அரசு போக்குவரத்துக் கழகங்களுக்காக கொள்முதல் செய்யப்படும் உதிரி பாகங்களின் தரங்களைப் பரிசோதிக்கும் பணிகளை இந்நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

அனைத்து போக்குவரத்துக் கழகங்களுக்குத் தேவையான முக்கிய பொருட்களாகிய பேருந்து அடிச்சட்டங்கள், டயர், மசகு எண்ணெய் (லூப்ரிகன்ட்ஸ்), பேருந்து கூண்டு கட்டுதல், முழுவதுமாகக் கட்டப்பட்ட பேருந்து, பயணச்சீட்டு அச்சிடுதல், டயர் புதுப்பிக்கத் தேவையான அடிப்படைப் பொருட்கள் மற்றும் மின்னனு பயணச் சீட்டு வழங்கும் கருவி ஆகியவைகளின் விலை மற்றும் ஒப்பந்த விதிகளை முடிவு செய்தல் மற்றும் ஓட்டுநர், நடத்துனர் மற்றும் இதர பணியாளர்களுக்கு பயிற்சி

அளித்தல் ஆகியவற்றிற்கு முகமை நிறுவனமாக செயல்பட்டு வருகிறது.

போக்குவரத்துக் கழகப் பணியாளர்களின் வாரிசுகள் தொழில்நுட்பக் கல்வியில் சிறந்து விளங்கவேண்டும் என்ற சீரியநோக்கில், ஈரோடு மாவட்டம் சித்தோட்டில் சாலைப் போக்குவரத்து நிறுவன பொறியியல் கல்லூரி ஒன்று 1984–85ஆம் கல்வி ஆண்டு முதல் இயங்கி வருகிறது.

இளங்கலைப் பொறியியல் பட்டப்படிப்பில் – தானியங்கிப் பொறியியல் (Automobile Engineering) மற்றும் கட்டடப் பொறியியல் (Civil Engineering) ஆகிய இரு பிரிவுகளில் ஆண்டுதோறும் 30 மாணவ மாணவியர்கள் வீதமும்; இயந்திரவியல் (Mechanical Engineering); கணினி அறிவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் (Computer and Informatics); மின்னணுவியல் மற்றும் மின்னியல் (Electrical and Electronics); மின்னியல் மற்றும் தகவல் பொறியியல் (Electronics and Communication Engineering); தகவல் தொழில்நுட்பவியல் (Information Technology) ஆகிய ஐந்து பிரிவுகளில் ஆண்டுதோறும் 60 மாணவ மாணவியர்கள் வீதம் சேர்க்கைக்கு



அனுமதிக்கப்படுகின்றனர். இதுவரை 6459 மாணவ மாணவியர்கள் பொறியியல் பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றுள்ளனர். இதில், 1176 மாணவ மாணவியர்கள், கல்லூரி வளாக நேர்காணல் முறையில் (Campus Interview) தேர்வு செய்யப்பட்டு, பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றி வருகின்றனர்.

மேலும் இப்பொறியியல் கல்லூரியில், முதுநிலைக் கணினிப் பயன்பாட்டுப் பிரிவில் (Master of Computer Applications) இதுவரை 620 மாணவ மாணவியர்கள் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளனர். கட்டமைப்புப் பொறியியல் பிரிவில் (M.E., Structural Engineering) இதுவரையில் 86 மாணவ மாணவியர்கள் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளனர்.

பெருந்துறையில் மருத்துவக் கல்லூரி ஒன்று 1986–87–ஆம் கல்வியாண்டில், சாலைப் போக்குவரத்து நிறுவனத்தால் தொடங்கப்பட்டு, எம்.பி.பி.எஸ்., மருத்துவப் பட்டப்படிப்பில், ஆண்டொன்றுக்கு 60 மாணவ மாணவியர்கள் சேர்க்கப்பட்டு, இதுவரையில் 1,132 மாணவ மாணவியர்கள் மருத்துவப் படிப்பில் பட்டம் பெற்றுள்ளனர்.

சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின் கட்டுப்பாட்டின் கீழ் குரோம்பேட்டை, பர்கூர் மற்றும்

திருநெல்வேலி ஆகிய மூன்று இடங்களில் தொழில்நுட்பப் பயிலகங்கள் 1992–93ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகின்றன. இத்தொழில்நுட்பப் பயிலகங்களில், கணினி தொழில்நுட்பவியல் (Computer Technology); மின்னியல் மற்றும் மின்னணுவியல் (Electrical and Electronics); மின்னணுவியல் மற்றும் தகவல் பொறியியல் (Electronics and Communication Engineering) ஆகிய 3 பிரிவுகளிலும் சேர்த்து, ஆண்டுதோறும் 520 மாணவ மாணவியர்கள் பட்டயப் படிப்பிற்கு அனுமதிக்கப் படுகின்றனர். இம்மூன்று தொழில்நுட்பப் பயிலகங்களில், இதுவரை 6070 மாணவ மாணவியர்கள் பட்டயப் படிப்பில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

மேலும், செவிலியர் பட்டயப் படிப்பில் 20 மாணவிகள் சேர்க்கப்பட்டு செவிலியர் பட்டயப் படிப்பில் பட்டம் பெற்றுள்ளார்கள்.

சாலைப் போக்குவரத்து நிறுவனம், கனரக வாகன ஓட்டுனர் பயிற்சி மையத்தை கும்மிடிபூண்டியிலும் மற்றும் இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சி மையத்தை சென்னையிலுள்ள தரமணியிலும் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலும் நடத்தி வருகிறது.



தற்பொழுது 19 மாவட்ட தலைமையிடங்களில் கனரக வாகன ஓட்டுனர் பயிற்சி பள்ளிகள் உள்ளன.

### 7. தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை:

மோட்டார் வாகன பராமரிப்புத் துறை, இயக்குநரை தலைமையாகக் கொண்டு கடந்த 58 ஆண்டுகளாக மாநிலம் முழுவதிலும் சென்னை, காஞ்சிபுரம், வேலூர், விழுப்புரம், கடலூர், சேலம், தர்மபுரி, ஈரோடு, கோயம்புத்தூர், உதகமண்டலம், தஞ்சாவூர், திருச்சி, சிவகங்கை, இராமநாதபுரம், மதுரை, திண்டுக்கல், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் நாகர்கோவில் ஆகிய 20 இடங்களில், அரசு தானியங்கிப் பணிமனைகள் மூலம் பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன. மேலும் சேலம், மதுரை, திருச்சி ஆகிய இடங்களில் 3 மண்டலத் துணை இயக்குநர் அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இத்துறை சுமார் 15,000 அரசுத் துறை வாகனங்களுக்குப் பழுதுநீக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 10 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன. அரசுத் துறை

வாகனங்களுக்குச் சிறந்த பராமரிப்பு சேவையை திறமையான முறையில் வழங்கும் நோக்கத்துடனும் இத்துறை இயங்கி வருகிறது. மேலும் இத்துறை அரசு வாகனங்களுக்கு தேவையான எரிபொருள், டயர் மற்றும் உதிரிபாகங்களை வாங்கி வழங்குகிறது. இத்துறை நவீன வகை வாகனங்களான ஸ்வராஜ் மஸ்தா, ஐஷர், ஹோண்டா சிட்டி, மகிந்திரா ஸ்கார்பியோ, டயோட்டா குவாலிஸ், டாட்டா ஸ்பேஸியோ போன்ற புதியவகை வாகனங்களையும் பராமரித்து வருகிறது.

## 8. **சென்னை ஒருங்கிணைந்த பெருநகர் போக்குவரத்து ஆணையம்** (CUMTA):

சென்னை மாநகருக்காக ஒருங்கிணைந்த பெருநகர் போக்குவரத்து குறித்த அனைத்து அம்சங்களையும் கண்காணிக்க, “ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்து ஆணையம்” ஒன்றினை அமைப்பதற்கான அடிப்படைப் பணிகளை அரசு மேற்கொண்டு வருகிறது. அனைத்து வகையான போக்குவரத்து சேவைகளையும் ஒன்றிணைத்து, அதன் மூலம் பயணிகள் எவ்வித சிரமமுமின்றி பேருந்துகள், புறநகர் ரயில், அதிவேக மக்கள் திரள் போக்குவரத்து



(MRTS), மோனோ ரயில், மெட்ரோ ரயில் உள்ளிட்ட பல்வேறு பொது போக்குவரத்து வசதிகளை ஒருங்கிணைப்பதே இதன் நோக்கமாகும். அனைத்துப் பொது போக்குவரத்து முறைகளும், பொதுவான பயணச்சீட்டு முறையைக் கொண்டு வந்து, அனைத்து முறைகளிலும் பொதுமக்கள் தடையின்றி, எளிதாக பயணிக்க இந்த ஆணையம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

## 9. **மோனோ இரயில் திட்டம் அறிமுகம்:**

சென்னை பெருநகரின் போக்குவரத்து நெரிசலை குறைக்கவும், குறைந்த பயண நேரத்தில் விபத்தில்லாத பாதுகாப்பான போக்குவரத்து வசதி அளிக்கவும் “மோனா இரயில்” அதிவிரைவு போக்குவரத்துத் திட்டத்தினை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்படி, நான்கு வழித்தடங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

(i) வண்டலூரிலிருந்து வேளச்சேரி வரை– பெருங்களத்தூர், இரும்புலியூர்(கிழக்கு), தாம்பரம்(கிழக்கு), கேம்ப் ரோடு, காமராஜ் நகர், செம்பாக்கம், கௌரிவாக்கம், மேடவாக்கம், பள்ளிக்கரணை, நாராயணபுரம், காமாட்சி மருத்துவமனை, மடிப்பாக்கம் கூட்டுரோடு ஆகிய

இடங்கள் வழியாக 23 கிலோமீட்டர் தொலைவிற்கும் (ii) பூந்தமல்லியிலிருந்து கத்திப்பாரா சந்திப்பு வரை – குமணன்சாவடி, கரையான்சாவடி, காட்டுப்பாக்கம், ஐயப்பன்தாங்கல், இராமச்சந்திரா மருத்துவமனை, போரூர், முகலிவாக்கம் சந்திப்பு, இராமாவரம், நந்தம்பாக்கம் பட் ரோடு ஆகிய இடங்கள் வழியாக 16 கிலோ மீட்டர் தொலைவிற்கும் (iii) பூந்தமல்லியிலிருந்து வடபழனி சந்திப்பு வரை – குமணன்சாவடி, கரையான்சாவடி, சவீதா பல்மருத்துவக் கல்லூரி, வேலப்பன் சாவடி, மதுரவாயல், ஆலப்பாக்கம், வளசரவாக்கம், விருகம்பாக்கம் ஆகிய இடங்கள் வழியாக 18 கிலோமீட்டர் தொலைவிற்கும் மற்றும் (iv) வண்டலூரிலிருந்து புழல் வரை – பெருங்களத்தூர், இரும்புலியூர், தாம்பரம், சென்னை ஏற்றுமதி வர்த்தக மண்டலம் (MEPZ), குரோம்பேட்டை, பல்லாவரம், பம்மல், அனகாபுத்தூர், ஆண்டாள்குப்பம், குன்றத்தூர், கொல்லசேரி, மாங்காடு, குமணன்சாவடி, கரையான்சாவடி, மேல்ப்பாக்கம், பருத்திப்பட்டு, கோவர்த்தனகிரி, ஆவடி மார்க்கெட், ஆவடி, திருமுல்லைவாயல், அம்பத்தூர் (O.T) புதூர், கள்ளிக்குப்பம், சூரப்பேட்டை, புழல், கதிர்வேடு ஆகிய இடங்கள் வழியாக 54 கிலோ மீட்டர் தொலைவிற்கும்



மோனோ இரயில் திட்டம் செயல்படுத்தப்படும். முதற்கட்டமாக 3 வழித்தடப் பணிகளும், இரண்டாவது கட்டமாக 4$^{வது}$ வழித்தடப் பணிகளும் மேற்கொள்ளப்படும்.

மோனோ இரயில் திட்டத்தின் கட்டுமானப் பணிக்கு குறைந்த அளவு நிலமே தேவைப்படும். ஒரு சதுர மீட்டருக்கு குறைவாகவே சுற்றளவு உள்ள தூண்கள் சாலையின் நடுவே மிக எளிதாகவும், விரைவாகவும் அமைத்து கட்டுமானப் பணிகள் செய்யப்படுவதால் மக்களுக்கு எவ்வித சிரமமும் இன்றி மோனோ இரயில் திட்டத்தைச் செயல்படுத்தலாம். மேலும், மோனோ இரயில் திட்டம் மிகவும் பாதுகாப்பானது மட்டுமின்றி பார்வைக்கு அழகாகவும், சுற்றுப்புறச் சூழலுக்கு எவ்வித பாதிப்பும் விளைவிக்காமலும் மக்களுக்குப் போக்குவரத்து வசதி அளிக்கும்.

மோனோ இரயில் திட்டம், தமிழ்நாடு அரசுக்கு எந்தவித நிதிச்சுமையும் இல்லாமல் வடிவமைத்து, நிறைவேற்றி, நிதி திரட்டி, இயக்கி, பராமரித்து ஒப்படைக்கும் (Design, Build, Fund, Operate and Transfer) முறையில் இயக்கப்படவுள்ளது.

இத்திட்டத்தில், சர்வதேச நிறுவனங்கள் பங்கேற்றுள்ளன. ஒப்பந்ததாரரைத் தேர்வு செய்யும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

## 10. மத்திய அரசு துறைகளின் முகவராக போக்குவரத்துத் துறையின் பங்கு:

மத்திய அரசுத் துறைகளான இரயில்வே, விமான போக்குவரத்து, தபால் மற்றும் தகவல் தொடர்புத் துறைகளின் முகவராக தமிழக அரசின் போக்குவரத்துத்துறை செயல்பட்டு வருகிறது. இரயில்வே துறையால் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களான புதிய இரயில்பாதை அமைத்தல், அகல இரயில் பாதையாக மாற்றுதல் மற்றும் இரண்டாவது அகல இரயில் பாதை அமைத்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் நிலங்களை போக்குவரத்துத்துறை கையகம் செய்து தருகிறது. மேலும் தமிழக அரசு, மாநிலத்தில் உள்ள இரயில் பாதைகளை விரிவுப்படுத்தவும், புதிய இரயில்களை இயக்கவும் மத்திய அரசைத் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறது.



## 11. விமான நிலையங்களை நவீனமயமாக்குதல் மற்றும் விரிவாக்கம் செய்தல்:

சென்னை விமான நிலைய விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்கல் தொடர்பான பணிகள் இந்திய விமான நிலைய ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழக அரசு, சம்பந்தப்பட்ட துறைகளுடன் கூட்டுக் கூட்டங்களை நடத்தி மதிப்புமிக்க இத்திட்டப் பணிகள் விரைவில் முற்றுப்பெற தனது முழுஒத்துழைப்பை நல்கி வருகிறது.

மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், தூத்துக்குடி மற்றும் சேலம் விமான நிலையங்களின் விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்கத்திற்காக நிலங்கள் வழங்குவது தொடர்பான இந்திய விமான நிலைய ஆணையத்தின் கோரிக்கையின் மீது அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

## 12. சென்னை விண்ணூர்தி பயில் குழாம்:

சென்னை விண்ணூர்தி பயில் குழாம், 1930–ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு பல ஆண்டுகளாக மாணவ, மாணவியர்களுக்கு விமானம் இயக்கும் பயிற்சி மற்றும் விமானம் பராமரிக்கும் பயிற்சியினை அளித்து வருகிறது. இக்குழாமில், பயிற்சி பெற்ற பல விமானிகளும்,

பொறியாளர்களும், விமானப் போக்குவரத்துத் துறையில் தற்போது பணிபுரிந்து வருகின்றனர்.

தமிழக அரசு, சென்னை விண்ணூர்தி பயில் குழாமிற்கு நிர்வாகச் செலவினங்கள் மற்றும் தொடர் செலவினங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட உதவித் தொகையாக ஓர் ஆண்டிற்கு ரூ.3.80 இலட்சமும், விமான எரிபொருள் உதவித் தொகையாக ரூ.3.72 இலட்சமும் வழங்கி வருகிறது.

**V.செந்தில்பாலாஜி**
**போக்குவரத்துத் துறை அமைச்சர்**



## மானியக் கோரிக்கை எண். 48

## போக்குவரத்துத் துறை

## வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2012–2013

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண் | துறை தலைமையகம் | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | தலைமைச் செயலகம் | 364,96,94 | 150,00,05 | 150,15,01 | 665,12,00 |
| 2 | மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை | 47,95,43 | 1 | - | 47,95,44 |
| | மொத்தம் | **412,92,37** | **150,00,06** | **150,15,01** | **713,07,44** |

## மானியக் கோரிக்கை எண். 48

## போக்குவரத்துத் துறை

## வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2012–2013

**(ரூபாய் ஆயிரத்தில்)**

| வ. எண் | துறைத் தலைமையகம் | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | தலைமைச் செயலகம் திட்டத்தில் சேராதது | 364,96,94 | 1 | 15.00 | 365,11,95 |
| | மாநிலத் திட்டம் | | 150,00,04 | 150,00,01 | 300,00,05 |
| 2 | மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை திட்டத்தில் சேராதது | 41,97,81 | - | - | 41,97,81 |
| | மாநிலத் திட்டம் | 5,97,62 | 1 | - | 5,97,63 |
| | மொத்தம் | **412,92,37** | **150,00,06** | **150,15,01** | **713,07,44** |



## 2012–13ஆம் ஆண்டிற்கான திட்டப்பணிகளுக்கான விவரப்பட்டியல் மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை

| வ. எண் | திட்டங்களின் பெயர் | திட்டச் செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | சென்னை, அரசு மத்தியத் தானியங்கிப் பணிமனையை மேம்படுத்துவதற்காக அதிநவீன தொழில்நுட்ப இயந்திரங்களுக்கு வகை செய்தல். | 27.00 |
| 2. | சென்னை, அரசு மத்தியத் தானியங்கிப் பணிமனையில் புதுரக வாகனங்களுக்கு சிறப்புக் கருவிகள் உபகரணங்கள் மற்றும் துணைப் பொருட்களோடு பணியாளர்களுக்கு தளபயிற்சி கொடுக்க வகை செய்தல். | 10,00 |
| 3. | மோட்டார் வாகன பராமரிப்புத் துறை கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து 20 தானியங்கிப் பணிமனை அலகுகளுக்கும் தூய்மைப்படுத்தும் கருவிகள் வழங்க வகை செய்தல். | 5,00 |
| 4. | மோட்டார் வாகன பராமரிப்புத் துறை தொழில்நுட்ப பணியாளர்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதிக்கு வகை செய்தல். | 8,00 |
| | **மொத்தம்** | **50,00** |